ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் - 2024

----

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 அபிப்பிராயம்

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 107(5) உப பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரை மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்கள் பல்கலைக்கழகத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

பல்கலைக்கழகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பல்கலைக்கழகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மன்றத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பல்கலைக்கழகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பல்கலைக்கழகம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

1.5.1 பெற வேண்டிய பணம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
23 உத்தியோகத்தர்களால் பெறப்பட்ட ரூபா 1,851,567 கூட்டு மதிப்புடைய இடர் கடன்கள், ஊழியர் கடன்கள் மற்றும் வாகனக் கடன்களின் நிலுவைகள் 1 வருடம் முதல் 6 வருடங்கள் வரையிலான காலத்தைக் கடந்திருந்த போதிலும், அக் கடன் நிலுவைகளை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை.	சேவையை விட்டு விலகுதல், இராஜினாமா செய்தல் போன்ற சந்தர்ப்பங்களில் பல்கலைக்கழக ஊழியர் சேமலாப நிதியத்தின் நிலுவைத் தொகைகளிலிருந்து எஞ்சிய கடன் தொகைகளை அறவிட வேண்டிய சந்தர்ப்பங்களில், அத்தொகைகள் விடுவிக்கப்படும் வரை கடனை மீளப்பெற முடியாது என்றும், ஏனைய கடன் தொகைகளை உரிய முறையில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், அது தொடர்ச்சியாக பின்தொடரப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	இந்த நிலுவைகளை அறவிடுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

1.6 முற்பணங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
2011 ஆம் ஆண்டில் ஒரு தனியார் நிறுவனத்திற்கு செலுத்தப்பட்ட ரூபா 1,764,013 பெறுமதியான மூலதன முற்பணம் தீர்க்கப்படாமல் உள்ளது.	இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.	இந்த நிலுவைகளை உடனடியாகத் தீர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபனக் கோவையின் அத்தியாயம் IX இன் பிரிவு 3.1	உயர் கல்வி நிறுவனங்கள் ஒவ்வொன்றிலும் பணியில் இருக்கும் நபர்கள் வருகை தரும் மற்றும் வெளியேறும் நேரத்தை வருகைப் பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும் என்ற போதிலும், மீளாய்வாண்டுக்காக ரூபா 3,448,606,465 பெறுமதியான சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள், கல்விசார் ஊழியர்களின் வருகை மற்றும் வெளியேறுதலை உறுதிப்படுத்தாமல் செலுத்தப்பட்டிருந்தது.	சம்பளம் தயாரிக்கும்போது, ஒவ்வொரு கல்விசார் உத்தியோகத்தர்கள் குறித்தும் பிரிவுத் தலைவரால் சேவையில் ஈடுபட்டமை உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே சம்பளம் செலுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.	தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் 571 (2) ஆம் பந்தி	03 வருடங்களுக்கு மேலாகியுள்ள ரூபா 1,301,438 மொத்த மதிப்புடைய 62 திருப்பிச் செலுத்த வேண்டிய ஒப்பந்தப் பிணையங்களும், 2 வருடங்களுக்கு மேலாகியுள்ள ரூபா 622,875 மதிப்புடைய 31 ஒப்பந்தப் பிணையங்களும் தீர்க்கப்பதற்கு அல்லது வருமானமாக கணக்கு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	பல்கலைக்கழகத்தின் கொள்கையின் படி, 03 வருடங்களுக்கு மேலாகியுள்ள திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய பிணையங்கள் வருமானமாக அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், அத்துடன் சில பிணையங்கள் சம்பந்தப்பட்ட சேவை வழங்குநர்களின் வேண்டுகோளின் பேரில் தொடர்ந்து பேணப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(இ)	1978 திசெம்பர் 19 ஆம் திகதிய திறைசேரிச் சுற்றறிக்கை இலக்கம் 842	நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட வேண்டியிருந்தபோதிலும், பல்கலைக்கழகம் அதன்படி செயற்படவில்லை. இருப்பினும், நிலையான சொத்துக்களுக்காக ஒரு தனி மென்பொருள் பயன்படுத்தப்பட்ட போதிலும், அந்த மென்பொருளில் நீக்கப்பட்ட சொத்துக்களின் கிரயம், திரண்ட பெறுமானத்தேய்வு, வருடத்திற்கான பெறுமானத்தேய்வு, தேறிய புத்தகப் பெறுமதி போன்ற தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை.	தற்போதுள்ள மென்பொருளில் அனைத்துத் தகவல்களையும் உள்ளடக்க முடியாது என்பதால், புதிய மென்பொருளின் எதிர்வரும் ஆண்டுகளில் வழங்க முடியும் என்றும், மேலும் திறைசேரிச் சுற்றறிக்கை 842 இன் படி, ஒவ்வொரு பிரிவிலும் நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	2024 ஜனவரி 10 ஆம் திகதிய தேசிய வரவு செலவுத் திட்டச் சுற்றறிக்கை இலக்கம் 01/2024 இன் 11.6 ஆம் பந்தி	முறையான அங்கீகாரம் இன்றி அரசாங்க நிதியைப் பயன்படுத்தி காப்புறுதித் திட்டங்கள், சலுகைக் கடன் திட்டங்கள் மற்றும் மருத்துவ கட்டணங்களை மீளளித்தல் போன்ற வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தக் கூடாது என அறிவுறுத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் ஊழியர்களுக்கான உள்ளக காப்புறுதித் திட்டம் ஒன்றுக்காக காப்புறுதி நிறுவனத்திற்கு ரூபா 38,228,040 செலுத்தப்பட்டிருந்தது.	பொது நிதிச் சுற்றறிக்கை 06/2019 மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை 718 இன் கீழ், கட்டுப்பாட்டுச் சபையின் அனுமதியுடன் 2018 ஆம் ஆண்டு முதல் செயற்படுத்தப்படும் இத்திட்டத்திற்கான அடிப்படைக் காப்புறுதித் தொகை மட்டுமே பல்கலைக்கழகத்தால் திரட்டப்பட்ட நிதியின் முதலீட்டு வட்டி மூலம் செலுத்தப்படுவதாகவும், அடிப்படை காப்புறுதித் தொகையை விட அதிகமாகப் பெறப்பட்ட காப்புறுதிக்கான கட்டணத்தை ஊழியர்கள் செலுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	-மேற்படி-
(உ)	2015 மே 07 ஆம் திகதிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின்	11 பீடங்களில் உள்ள 95 துறைகளின் 126 பட்டப் படிப்புகளுக்கான விரிவுரை நெறிமுறைத் திட்டம்	மானுடவியல் மற்றும் சமூக அறிவியல் பீடத்திற்காக விரிவுரை நெறிமுறைத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது	-மேற்படி-

	UGC/AC/AQ/Gen இலக்கச் சுற்றறிக்கை	(lecture norms plan) ஆண்டின் இறுதிவரை தயாரிக்கப்படவில்லை.	என்றும், மற்ற பீடங்களுக்காகத் தயாரிக்க அறிவுறுத்தல்கள் வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	
(ஊ)	2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய இலக்கம் 01/2020 கொண்ட அரச நிதிக் சுற்றறிக்கையின் பந்தி 7.1.4 மற்றும் 7.1.5	முதுகலை பட்டப்படிப்புகள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் ஆலோசனைச் சேவைகள் மூலம் பெறப்படும் வருமானத்தில் 20 - 35 வரையிலான சதவீதத்தை பல்கலைக்கழகத்தின் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திப் பணிகளுக்காக ஒதுக்க முடியும். அவ்வாறு ஒதுக்கப்பட்ட பணத்தை பாராளுமன்றத்தின் அங்கீகரிக்கப்பட்ட சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக நிதியங்களுக்கு மட்டுமே அனுப்ப வேண்டும். ஆனால், நியதிச்சட்டமற்ற 117 நிதியங்களுக்கு முறையான அங்கீகாரம் இன்றி ரூபா 980,460,355 தொகை நடப்பாண்டில் செலவு வைக்கப்பட்டிருந்தது.	பல்கலைக்கழகச் சட்டத்தின் 99 ஆவது பிரிவின் கீழ் பல்கலைக்கழக நிதியத்தைப் பேண முடியும் என்பதால் அது ஒரு சட்டரீதியான நிதியமாகும் என்றும், மேலும் சட்டம் குறிப்பிட்ட பணிகளின் அடிப்படையில் கணக்குகளைப் பேண அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றும், இந்த நிதியங்கள், கணக்குகள் (Accounts) மட்டுமே என்றும், அவை பல்கலைக்கழக நிதியத்தின் கீழ் இருப்பதாகவும், அத்துடன் இந்த நிதியங்கள் நியதிச்சட்ட நிதியங்கள் என்பதால் அவை நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	-மேற்படி-
(எ)	2023 ஜனவரி 18 ஆம் திகதிய இல. BD/HRD/126/214/ 19/2023 கொண்ட திறைசேரிச் செயலாளரின் கடிதம் மற்றும் 2023 ஜூலை 04 ஆம் திகதிய 05/2023 இலக்கமுடைய பல்கலைக்கழக மானியங்கள்	ஒப்பந்தங்கள் மற்றும் பிணைமுறி மீறல்களுக்காக அறவிடப்படும் பணத்தை, அறவிட்டவுடன் திறைசேரிக்கு அனுப்ப வேண்டும். ஆனால், மீளாய்வாண்டில் அறவிடப்பட்ட தொகையில் இருந்து விமான டிக்கெட் செலவுகளைக் கழித்த பின்னர், ரூபா 125,321,671 தொகையான தேறிய தொகை திறைசேரிக்கு அனுப்பப்படவில்லை.	சப்த வருடாந்த விடுமுறைக்கான விமான டிக்கெட்டுகளுக்காக எதிர்பார்க்கப்படும் மதிப்பீட்டுத் தொகையைக் கணக்கிடுவதற்கு கல்வி நிறுவனங்கள் பிரிவு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும், மதிப்பீட்டின்படி எதிர்பார்க்கப்படும் செலவுத் தொகையைத் தடுத்து வைத்த பின்னர், மீதமுள்ள தொகையை	-மேற்படி-

	ஆணைக்குழுவின் சுற்றறிக்கை		திறைசேரிக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	
(ஏ)	2024 நவம்பர் 06 ஆம் திகதிய இல. 04/2024 கொண்ட அரச நிதிக் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி	அரச நிதிக் முகாமைத்துவச் சட்டம் நடைமுறைக்கு வரும் நாளிலிருந்து, நியதிச்சட்டமற்ற நிதியங்களின் செயற்பாடு முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் மற்றும் அந்தச் சட்டம் நடைமுறைக்கு வந்த நாளிலிருந்து ஒரு வருட காலத்திற்குள் அந்த நிதியங்கள் கலைக்கப்பட வேண்டும். இருப்பினும், மொத்த மதிப்பு ரூபா 2,189,520,268 ஆன 117 நியதிச்சட்டமற்ற நிதியங்கள் கலைக்கப்பட்டு பல்கலைக்கழக நிதியத்திற்குக் செலவு வைக்க நடவடிக்கை எடுகப்படவில்லை.	பல்கலைக்கழகச் சட்டத்தின் 99 ஆவது பிரிவின் படி, பல்கலைக்கழக நிதியம் ஒரு சட்டரீதியான நிதியமாகும் என்றும், அந்த நிதியத்தின் கீழ் கணக்குகள் பேணப்பட்டு வருகின்றன என்றும், அவற்றின் செயற்பாடு நிதி அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ளது என்றும், மேலும் அந்தக் செயற்திட்டக் கணக்குகளை முடிவுக்குக் கொண்டுவருதல் இல்லை என்றும், இது தொடர்பாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு திறைசேரியுடன் கலந்துரையாடுவதால், உரிய அறிவுறுத்தல்கள் எதிர்காலத்தில் கிடைக்கப்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	-மேற்படி-
(ஐ)	2019 ஜூலை 25 ஆம் திகதிய SC&PMU/Grant/19 இலக்கமுடைய மற்றும் 2020 ஆகஸ்ட் 14 ஆம் திகதிய SC&PMU/Grant/20 இலக்கமுடைய வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதங்கள் மற்றும் 2020 ஒக்தோபர் 02	வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் அறிவுறுத்தல் மற்றும் இணக்கம் இன்றி, மீளாய்வாண்டில் 13 சந்தர்ப்பங்களில் வெளிநாட்டு ஆராய்ச்சி மானியங்களாக ரூபா 185,118,451 பெறப்பட்டிருந்தது.	இந்த வெளிநாட்டு மானிய நிதியைப் பெறும்போது, உரிய அறிவுறுத்தல்களின்படி தேவையான அனுமதிகளைப் பெறுதல் பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்படுவதாகவும், அத்துடன் ஆராய்ச்சிக்காக வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் அனுமதியைப் பெறத் தேவையில்லை என்று அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளதாக	-மேற்படி-

	ஆம் திகதிய ERD/AE/GEN/16 இலக்கமுடைய நிதி அமைச்சின் கடிதம்	வும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 3,752,499,412 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 2,715,696,160 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,036,803,252 ஆன அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. மீண்டெழும் மானியங்கள் ரூபா 849,500,000 இனால் மற்றும் வெகுமதிகள் மற்றும் உதவிகள் (உள்நாட்டு/வெளிநாட்) ரூபா 768,466,573 இனால் அதிகரித்தமை இந்த அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக இருந்தது.

2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

பல்கலைக்கழகத்தின் ஒட்டுமொத்த வருமானம் கடந்த ஆண்டை விட ரூபா 1,450,246,821 ஆல், அதாவது 11.98 சதவீதம் அதிகரித்துள்ளது. அதேவேளை, ஒட்டுமொத்த செலவுகள் ரூபா 413,443,569 ஆல், அதாவது 4.4 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பல்கலைக்கழகத்திலிருந்து மலம் மற்றும் கழிவுநீரை அகற்றுதல் மற்றும் சுத்திகரிப்புச் செயல்முறைக்காக வருடந்தோறும் ரூபா 10 மில்லியனுக்கும் அதிகமான செலவை ஏற்க வேண்டியிருந்த போதிலும், சுற்றுச்சூழலுக்கு உகந்த முறையில் மலம் மற்றும் கழிவுநீரை வெளியேற்றுவதற்காக கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்பு ஒன்றை நிறுவ நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	இங்கு 17,200 மாணவர்கள் (அதில் 5,500 பேர் விடுதிகளில் முழுநேரமும் தங்கியுள்ளனர்) மற்றும் சுமார் 3,000 ஊழியர்கள் இருப்பதால், மலம் மற்றும் கழிவுநீர் அதிக அளவில் சேகரிக்கப்படுவதால் இத்தகைய செலவை ஏற்க நேரிடுகிறது என்றும், இதனைக் கட்டுப்படுத்துவதற்காக 5 இடங்களில் கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்புகளை நிறுவப்பட்டுள்ளது / நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	மலம் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு அமைப்பை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(ஆ)	இளங்கலைப் பட்டதாரி மாணவர்களுக்குத் தேவையான செய்முறைப் பயிற்சியை வழங்குவதும், பட்டதாரி மாணவர்களுக்கு வேலைவாய்ப்பை உறுதி	2025 மே 02 அன்று பிரயோக விஞ்ஞான பீடத்திலும் மற்றும் 2025 மே 20 அன்று தொழில்நுட்ப பீடத்திலும் நடைபெற்ற பயிற்சி அமர்வுகளின் தகவல்கள்	செய்முறைப் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு வழங்கப்பட்ட மாணவர்கள் குறித்த தரவுகளையும்

செய்வதும் தொழில் வழிகாட்டல் பிரிவால் மேற்கொள்ளப்பட வேண்டிய முக்கிய பணிகளாகும். இருப்பினும், தொழில் வழிகாட்டல் பிரிவின் கீழ் செய்முறைப் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பு வழங்கப்பட்ட மாணவர்கள் குறித்த தரவுகளும் தகவல்களும் தெளிவாகவும், இற்றைப்படுத்தப்பட்ட நிலையிலும் பேணப்படவில்லை.	இற்றைப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.	தகவல்களையும் இற்றைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.2 குறைப்பயன்பாடுடைய நிதியங்கள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
2 வருடங்களுக்கு முன்னர் பெறப்பட்ட ரூபா 22,146,926 பெறுமதியான ஆராய்ச்சி மானியங்கள் உரிய நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படாமல் விளைவற்ற நிலையில் காணப்பட்டன.	இந்த ஆராய்ச்சி மானியங்களை வழங்கும் போது, குறிப்பிட்ட காலப்பகுதியும் நோக்கங்களும் வழங்கப்பட்ட பின்னர் ஆராய்ச்சிகள் அமுல்படுத்தப்படும் என்றும், அதன் அடிப்படையில் நிதி பயன்படுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	குறைந்த அளவில் பயன்படுத்தப்பட்ட ஆராய்ச்சி நிதியங்களைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.3 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
2018 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியுடன் தொடர்புடைய 59 ஒப்பந்த வேலைகளின் மொத்தத் தொகையான ரூபா 48,908,053 பெறுமதியான பிடிகாசு தொகைகள், சம்பந்தப்பட்ட ஒப்பந்தங்களின் தற்போதைய நிலையைப் பரிசோதித்து தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.	பல்கலைக்கழகத்தின் கணக்காய்வுக் குழுவின் பரிந்துரையின் பேரில், 2017 ஆம் ஆண்டு வரையான பிடிகாசு வருமானமாகக் கணக்கிடப்பட்டுள்ளன என்றும், தற்போதுள்ள பிடிகாசு தொகைகள் ஆண்டுதோறும் பரிசோதிக்கப்பட்டு, தீர்மானிக்கப்பட்டதன் அடிப்படையில் கணக்குகளில் சரிசெய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	நீண்டகாலமாக நிலுவையிலுள்ள ஒப்பந்தங்களின் பிடிகாசு தொகைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

4. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

4.1 ஆண்டறிக்கை

	கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
(அ)	(i) 2021 நவம்பர் 16 ஆம் திகதிய அரச நிறுவனங்கள் சுற்றறிக்கை இல. 01/2021 இன் அரச நிறுவனங்களுக்கான நல்லாளுகைக்கான வழிகாட்டல் கோவையின் பந்தி 2.4 இன் பிரகாரம், பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு கட்டுப்பாட்டு சபை உறுப்பினரகள் தொடர்பான விபரங்கள் ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும், அந்த விபரங்கள் உள்ளடக்கப்படவில்லை.	ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்படும் போது அவ்வாறு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.	சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
	(ii) அத்தியாயம் 3 இன் பந்தி 3.1 இன் படி, குறைந்தது கடந்த 5 வருடங்களுக்கான ஆண்டறிக்கைகள் பல்கலைக்கழகத்தின் இணையத்தளத்தில் உள்ளடக்கப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், பல்கலைக்கழகத்தின் எந்தவொரு வருடாந்த அறிக்கையும் இணையத்தளத்தில் உள்ளடக்கப்படவில்லை.	ஆண்டறிக்கையை சமர்ப்பிக்கும் போது அவ்வாறு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பது.	-மேற்படி-
(ஆ)	2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 17 (ஈ) பந்தியின் பிரகாரம், சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் சுற்றுச்சூழலில் ஏதேனும் எதிர்மறையான தாக்கம் ஏற்பட்டால் அதைக் குறைப்பது பற்றிய விவரங்கள், அத்துடன் தேவைப்படும்போது சுற்றுச்சூழல் மற்றும் அனர்த்த தாக்க மதிப்பீடுகள் உள்ளடங்கக்கூடிய	ஆண்டறிக்கையைச் சமர்ப்பிக்கும் போது அவ்வாறு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.	-மேற்படி-

நிலையான அபிவிருத்தியை அடிப்படையாகக் கொண்ட எதிர்கால நோக்கு அறிக்கை ஆண்டறிக்கைகளில் உள்ளடக்கப்பட வேண்டும். இருப்பினும், சமர்ப்பிக்கப்பட்ட ஆண்டறிக்கையில் அத்தகைய அறிக்கை உள்ளடக்கப்படவில்லை.

4.2 கூட்டிணைந்த திட்டம்

கணக்காய்வு அவதானிப்புக்கள்	முகாமைத்துவத்தின் கருத்துரை	பரிந்துரை
2021 நவம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 01/2021 கொண்ட பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பந்தி 2.3 இன் படி, பல்கலைக்கழகம் ஐந்து வருட காலப்பகுதிக்கான ஒரு கூட்டிணைந்த திட்டத்தை தயாரிக்க வேண்டும் எனினும், 2021-2025 காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் மீளாய்வாண்டுக்காக இற்றைப்படுத்தப்படவில்லை.	2021 – 2025 கூடடிணைந்த திட்டம் 2023 ஆம் ஆண்டில் இற்றைப்படுத்தப்பட்டுள்ளது என்றும், 2026 - 2030 இற்கான கூட்டிணைந்த திட்டப் பணிகள் அத்துறையின் நிபுணத்துவப் பேராசிரியர்கள் இருவரின் இணைத் தலைமைத்துவத்தின் கீழ் இயங்கும் குழுவால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.	சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.